DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 97 / 2014 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 4 |
| Name | திரு. முத்து |
| Father Name | கருப்பசாமிநாடார் |
| Village | ஏரல் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 70 |

**<u>( பிரிவு 299 ன் கீழ் சாட்சியம் சமூக நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படுகிறது)</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 27-04-2026.(நேரம்: 12.50PM )**

**( சாட்சியம் காணொலி மூலம் எடுக்கப்படுகிறது)**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது ஏரலில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.
3. அசா 1, 2 மற்றும் இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது.
4. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.
5. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 4 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 4ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த

நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 06.01.2013 ஆம் தேதி மதியம் 02.30 மணியளவில் இவ்வழக்கின் 1 முதல் 3 வரையுள்ள எதிரிகள் அசா 1 ஐ கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசி அடித்து காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட சம்பவத்தை நான் கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு அசா 1 ஐ அழைத்து சென்றேன் என்றும் அசா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்த செய்தேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 97 / 2014 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 3 |
| Name | திரு. ரமேஸ் |
| Father Name | ஆனந்த ராஜ் |
| Village | லட்சுமிபுரம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 37 |

**( பிரிவு 299 ன் கீழ் சாட்சியம் சமூக நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படுகிறது)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 27-04-2026.(நேரம்: 12.50PM )**

**முதல்விசாரணை**

1.நான் தற்போது லட்சுமிபுரத்தில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன்.

3.சாட்சி ராஜா என்பவரை எனக்கு தெரியும்.

4. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள ரமேஷ் என்ற முதலாவது கையொப்பம் என்னுடையது தான். எங்கு வைத்து கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்று தற்போது எனக்கு நினைவில் இல்லை.

5. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

6. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 3 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 3ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 06.01.2013 ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு நானும், சாட்சி ராஜாவும் திரவியம் பெட்ரோல் பல்க் அருகே நின்றுக்கொண்டிருந்தபோது ஏரல் போலிசார் எங்கள் முன்னிலையில் வழக்கு சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரத்திற்கு நாங்கள் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

+